அமரர் ஜீவா நினைவு அறக்கட்டளையின்
கீழ் இயங்கும்

அவ்வை நடுநிலைப் பள்ளி
தாம்பரம்.

2021 - 2022 ஆண்டறிக்கை விவரம்

# அவ்வை நடுநிலைப் பள்ளி, தாம்பரம்.

அவ்வை நடுநிலைப் பள்ளி 1956 ஆம் ஆண்டு இப்பகுதிவாழ் மக்களான கல்லுடைக்கும் தொழிலாளர்களின் ஏழைக் குழந்தைகள் படிப்பறிவு பெறவேண்டும் என்ற நல்லுள்ளம் கொண்ட அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்கள் முயற்சியினாலும் அமரர் ப. ஜீவானந்தம் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் துவக்கப் பள்ளியாக திறந்து வைக்கப்பட்டது. தற்போது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அன்று முதல் இன்று வரை பள்ளிச் செயலராக திரு. ஜி. மணிகுமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போது துவக்கம் என்ற தனியார் தொண்டு நிறுவனத்தினர் பள்ளிக்குத் தேவையான மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்துத் தந்ததுடன் பள்ளிக்கு வண்ணம் அடித்தும் கருத்தைக் கவரும் படங்களை சுற்றுச்சுவர்களில் வரைந்தும் கொடுத்து உள்ளனர்.



எமது பள்ளியில் அனைத்து தேசிய விழாக்களும் வருடாவருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. 26.01.2021 அன்று குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. மேனாள் கூட்டுறவுத்துறை துணை பதிவாளர் திரு.கண்ணன் மூர்த்தி அவர்கள் தேசியக்கொடி ஏற்றி சிறப்பித்தார். கொரோனா பெருந்தொற்று காரணமாக சமூக இடைவெளியுடன் விழா கொண்டாடப்பட்டு மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

04.08.2021 அன்று நெகிழிக்கழிவுகளைப் பயன்படுத்துவதை குறைத்தல் மீண்டும் பயன்படுத்துதல், மறுசுழற்சிக் கொள்கைகள் என்ற தலைப்பில் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி நடைபெற்றது.

15.08.2021 அன்று 75வது சுதந்திரதினவிழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவுத் துறை மேனாள் சார் பதிவாளர் திரு.கண்ணன் மூர்த்தி மற்றும் கிரசண்ட் கல்லூரியின் துணைப் பேராசிரியர் திரு.சல்மான்கான் அவர்களும் கலந்து கொண்டு கொடியேற்றி சிறப்பித்தனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக எட்டாம் வகுப்பு மாணவர்கள் மட்டும் பங்கேற்றனர்.

14.11.2021 அன்று குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

18.03.2022 அன்று பிளாஸ்டிக் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடத்தப்பட்டது. அதில் எம்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் நகர அலுவலர் திரு.பார்த்திபன், சுகாதார அலுவலர் திரு.அறிவு செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் திரு.நாகராஜ், சிவகுமார்

திரு. ராஜசிம்மா சுகாதார மேற்பார்வையாளர் திரு. அந்தோணி ஆகியோர் கலந்து கொண்டனர்.




15-07-2022 அன்று கல்வி வளர்ச்சி நாள் சிறப்பு விருந்தினர்கள் கஞ்சனூரான் தகவல் புகழ் முனைவர் சி. முருகன் அவர்களும் முனைவர் கு. தாமோதரன் நூலகர் அவர்களும் கலந்து கொள்ள சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவர்களின் நடனம், கவிதை மற்றும் பேச்சு போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.



15.08.2022 அன்று 76 வது சுதந்திர தின விழா சிறப்பு விருந்தினர்களாக தாம்பரம் மாநகராட்சியில் 49 வது வார்டு உறுப்பினர் திரு. D. காமராஜ் அவர்களும் மேனாள் கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் திரு. S. கண்ணன் மூர்த்தி மற்றும் மேனாள் அரசு நிதித்துறை இணைச் செயலாளர் திருமதி. K. சுசிலா அவர்களும் பள்ளி மேலாண்மைக் குழு செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தாம்பரம் மாநகராட்சியின் 49 வது வார்டு உறுப்பினர் திரு. D. காமராஜ் அவர்கள் தேசியக்கொடியேற்றியதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



05.09.2022 அன்று முப்பெரும் விழாவாக பெரியவர் முனு ஆதி அவர்களின் பிறந்தநாள் விழா ஆசிரியர் தினவிழா மற்றும் வ.உ.சி. பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு தலைவர்களின் பிறந்தநாள்களைக் கொண்டாடுவதன் சாராம்சம் பற்றி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கூறியதுடன் விழா சிறப்பாக முடிவுற்றது.



08.09.2022 அன்று உலக எழுத்தறிவு தினத்தையொட்டி
4 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு
நூலக புத்தகங்கள் வழங்கப்பட்டு வாசிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.



08.09.2022 அன்று மாலை 3 மணியளவில் Mass Drill எனப்படும் வெகுஜனப் பயிற்சி 4 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் குழு மனப்பான்மை, கட்டளைக்கு கீழ்ப்படிதல், ஒருமுகப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு அறிந்து கொண்டனர்.

05.10.2022 அன்று விஜயதசமி விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. இதில் பள்ளிச்செயலர் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





14.11.2022 அன்று குழந்தைகள் தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மாறுவேடப் போட்டியும் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும் ஆறுமுதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டியும் நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தலைமையாசிரியை
அவ்வை நடுநிலைப்பள்ளி
தாம்பரம்

For AMARAR JEEVA MEMORIAL
CHARITABLE TRUST
J. Manikumar
(J. MANIKUMAR)
Managing Trustee